# Sub Court, Eraniel

O.S. No.40/2018
Date: 11.02.2026.
DW1- திரு.ஜெயசேகரன்

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.
வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

பட்டிகை சொத்து மற்றும் கூடுதல் பாகமான 60 சென்ட் முதலில் வாதிக்கு உரிமைப்பட்டது என்றால், சரியல்ல. அவருடைய அண்ணனுக்கு பாத்தியப்பட்டது. முதலில் வாதிக்கு தான் பாத்தியப்பட்ட சொத்து என்றால், சரிதான். வாதிக்கு அவருடைய பெற்றோர் 1984 ம் ஆண்டு இஸ்டதானம் எழுதிக் கொடுத்தார் என்றால், அது விபரம் எனக்குத் தெரியாது. வாதியின் சகோதரர் ஜோசப் சிறில் என்றால், சரிதான். 1992ம் ஆண்டு வாதிக்கு சொந்தமான அந்த 60 சென்ட் சொத்தினை ஜோசப் சிறில் போலியான கிரய ஆவணம் உருவாக்கினார் என்றால், சரியல்ல. அந்த கிரய ஆவணம் வாதி எழுதி கொடுத்தது போல அவருடைய கையொப்பத்தை மோசடியாக போட்டு தயார் செய்தது என்றால், சரியல்ல. எனவே ஜோசப் சிறில் எழுதி வாங்கிய கிரய ஆவணம் செல்லத்தக்கது அல்ல என்றால், சரியல்ல. அந்த போலியான ஆவணத்தின் அடிப்படையில் ஜோசப் சிறிலின் மகள் அஸ்வினி குமாரி எனக்கு எழுதி தந்த கிரய ஆவணம் செல்லாது என்றால், சரியல்ல. அந்த கிரய ஆவணத்தின் அடிப்படையில் நான் எனது மனைவி ஸ்ரீதேவிக்கு எழுதிக் கொடுத்த செட்டில்மென்ட் ஆவணம் செல்லாது என்றால், சரியல்ல. ஜோசப் சிறில் எழுதி வாங்கியதாக சொல்லும் கியர ஆவணம் போலியானது என்பதால், அதற்கு பிறகு எழுதப்பட்ட அனைத்து ஆவணங்களும் செல்லாது என்றால், சரியல்ல. அந்த ஆவணங்களின் அடிப்படையில் எனக்கு கைவச அனுபவம் எதுவும் கிடைக்கவில்லை என்றாலும், சொத்தின் அனுபவம் வாதியிடம் தான் உள்ளது என்றால், சரியல்ல. போலியான ஆவணத்தின் மூலம் பெறப்பட்ட நிலத்தீர்வை ரசீதை தான் நான் தாக்கல் செய்திருக்கிறேன் என்றால், சரியல்ல. உண்மை விபரங்களை மறைத்து நான் தவறுதலாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
இரணியல்,